**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.130/2022**
**Prosecution Witness**:10

| Name | திரு.சிவகுமார் (PW10 ) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of November 2025** by S.Ramakrishnan Junior Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக வட்டார போக்குவரத்து அலுவலகம், பவானியில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.03.2022ம் தேதி வட்டார போக்குவரத்து அலுவலகம், ஈரோடு கிழக்கில் பணியில் இருந்தபோது, மதியம் 03.50 மணியளவில் TN 33 AF 5431 என்ற TVS இருசக்கர வாகனத்தை அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வின் போது சேதாரங்கள்

1) வாகனத்தின் முன் வலதுபுற கால்மிதி வளைந்திருந்தது.

ஆய்வின்போது வாகனம் இயக்க இயலாது நிலையில் இருந்ததால் வாகனத்தை நிலையாக வைத்து ஆய்வு செய்தபோது தடைகள் சரியாக இருந்தது. வாகனத்தின் கைப்பிடி சரியாக இருந்தது. வாகனத்தின் உருளைகள் சரியாக இருந்தன. என்னுடைய கருத்தின்படி இந்த விபத்தானது வாகனத்தின் எந்த ஒரு இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என சான்றளித்தேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் வழங்கிய சான்றிதழில் தட்டச்சு பிழையினால் மேற்படி வாகனத்தின் எண் TN 33 AF 5431 என்ற பதிவு எண்ணிற்கு பதிலாக தவறுதலாக TN 33 AD 5431 என்று சான்று வழங்கினேன். நான் ஆய்வு செய்த வாகனத்தின் பதிவுஎண் TN 33 AF 5431 என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.07 12:56:02 +0530

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.11.07 12:56:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.